# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 07 வியாழக்கிழமை 24.10.2024 கதிர் 397







## பிரதமர் ஹரினியைச் சந்தித்த கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ்!

கொழும்பு, அக். 24

இலங்கை - கனடா இடையிலான இருதரப்பு உறவுகளைப்பேணுவதற்கான கனடாவின் உறுதிப்பாட்டை இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ், இலங்கையின் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இந்த உறுதிப்பாட்டை வழங்கியுள்ளார்.

இருவருக்குமிடையிலான சந்திப்பு, நேற்றுப் புதன்கிழமை பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கையின் சமூகப் பாதுகாப்பு முறைமையை வலுப்படுத்துதல், பெண்களின் தொழில்முயற்சியை ஊக்குவித்தல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையின் முக்கியத்துவம் உட்பட அபிவிருத்தியின் முக்கிய பகுதிகள் குறித்து இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது. நாட்டின் அபிவிருத்தியில் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பிரதமர் இதன்போது விவரித்தார். இந்த சந்திப்பின் போது கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி உட்படப் பலர் கலந்து கொண்டனர். (இ-12)

## அனுரவின் தேசிய மக்கள் சக்திக்கும், ஈ.பி.டி.பிக்கும் வேறுபாடு இல்லை: அவர்களும் போராளிகள் - நாங்களும் போராளிகளே என்கிறார் ஜீவன்!



**யாழ்ப்பாணம், அக். 24**

**மத்தியில் ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அனுர குமார திசநாயக்காவின் அரசியல் கொள்கைக்கும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அரசியல் கொள்கைக்கும் இடையில் ஒற்றுமை இருக்கின்றது. அவர்களும் போராளிகளாக இருந்து பின்னர் நாடாளுமன்ற ஜனநாயக வழிமுறையூடாக வந்தவர்கள்.**

அதே போன்றே ஈ.பி.டி.பியும் இருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) யின் நாடாளுமன்ற வேட்பாளர் சிவகுரு பாலகிருஸ்னர் (ஜீவன்) பொதுத் தேர்தலின் பின் அமையவுள்ள புதிய நாடாளுமன்றத்தில் பேரம்பேசும் சக்தியாக ஈ.பி.டி.பியைத் தமிழ் மக்கள் வலுப்படுத்துவார்கள் என்று ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற வேட்பாளர் சிவகுரு பாலகிருஸ்னர் (ஜீவன்) நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு, அவர் மேலும் குறிப்பிடுகையில், மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கட்சியின் கொள்கை நிலைப்பாட்டை வலுப்படுத்தி அதனூடாக மக்களின் நலன்களையும், அவர்களது எதிர்பார்ப்புக்களையும் நிறைவு செய்து கொள்வதற்காக நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் எமக்கு அதிகளவு ஆதரவை வழங்குவார்கள்.

அத்துடன் மக்கள் எமக்கு வழங்குகின்ற ஆதரவுப் பலத்தைக் கொண்டே நாம் மத்தியில் அரசமைக்கும் தரப்புக்கு ஆதரவு கொடுத்து, பேரம்பேசும் சக்தியாக அதில் பங்கெடுத்து மக்களின் அபிலாசைகளை பெற்றுக்கொடுக்க முடியும்.

குறிப்பாக, அரசியல் புலத்தில் மாற்றம் வேண்டும் என்று எண்ணிய மக்கள், மத்தியில் ஆட்சி அதிகாரத்தை மாற்றி அமைத்துவிட்டனர். அதேபோன்று தமிழ் மக்களின் மனங்களிலும் அந்த மாற்றம் ஏற்பட வேண்டும். அந்த மாற்றம் ஈ.பி.டி.பியினராகிய எம்மை நோக்கியதாக இருக்கவேண்டும் என்று மக்கள் உணர்ந்து கொண்டுவிட்டனர்.

இதேவேளை, மத்தியில் ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்காவின் அரசியல் கொள்கைக்கும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அரசியல் கொள்கைக்கும் இடையில் ஒற்றுமை இருக்கின்றது. ஏனெனில் அவர்களும் போராளிகளாக இருந்து பினனர் நாடாளுமன்ற ஜனநாயக வழிமுறையூடாக வந்தவர்கள்.

2➤

## ஊர்காவற்துறையில் ஆயுதங்கள் மீட்பு சந்தேக நபருக்குப் பொலிசார் வலைவீச்சு!



யாழ்ப்பாணம், அக். 24

யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கூரிய ஆயுதங்கள் சில பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த வீட்டில் வசித்து வந்த நபரொருவரைச் சந்தேகத்தின் பேரில் பொலீஸார் தேடிவருகின்றனர்.

ஐந்து வாள்கள் உட்பட எழு கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட போதிலும், சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்பட்டவில்லை. ஊர்காவற்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இன்று காலை நடத்தப்பட்ட சோதனையின் போது வீடொன்றில் இருந்து இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வன்முறையில் ஈடுபடுவதற்குத் தயாராக இந்த ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். வீட்டில் வசித்துவந்த நபரொருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் ஊர்காவற்துறைப் பொலிஸா சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## அமெரிக்கத்தூதுவர் ஜூலீ சங் யாழ். பல்கலைக்கு விஜயம்!



யாழ்ப்பாணம், அக்.24

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜ/லீ சங் மற்றும் தூதரக அதிகாரிகள் இன்று காலை யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயமென்றினை மேற்கொண்டனர்.

ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தினால், யூ.எஸ். எயிட் நிதியுதவியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக்கலைப்பீடத்தின் மெய்யியல் துறையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்க செயற்றிட்டத்தின் கீழ் நடாத்தப்படும் “அகம்” உளவளத் துணை நிலையத்துக்கே அமெரிக்கத் தூதுவர் தலைமையிலான குழுவினர் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தின் போது, அமெரிக்கத் தூதுவர் ஜ/லீ சங் உடன்,யூ.எஸ். எயிட் இன் சமூக ஒத்திசைவு

2➤

## அமெரிக்கத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)





மற்றும் நல்லிணக்க செயற்றிட்டத்தின் தலைமை அதிகாரி ஜெயதேவன் கார்த்திகேயன் மற்றும் தூதரக அதிகாரிகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் மற்றும் உயப் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி ஆகியோருடன் மெய்யியல் துறைத் தலைவர் திருமதி அபிராமி ராஜ்குமார், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.கஜவிந்தன், உளவள ஆலோசகர் திருமதி ஆர்.சாவித்திரிதேவி உட்படப் பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் உளவியல், மெய்யியல் துறைகளின் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

அமெரிக்கத் தூதுவர் ஜ/லீ சங் “அகம்” உளவளத்துணை நிலையத்தின் செயற்பாடுகளைப் பார்வையிட்டதோடு மாணவர்களுடன் அளவளாவி நிலைமைகளைக் கேட்டறிந்தார். அதன் பின்னர் துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகளுடன் கலந்துரையாடிய அமெரிக்கத் தூதுவர் தற்கால நிலைமைகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டார்.

(ஜ-05)

## அநுரவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதே போன்றே ஈ.பி.டி.பியும் இருக்கின்றது. அத்துன் அவர்களும் இடதுசாரிக் கொள்கை உடையவர்கள் எமது கொள்கையும் இடதுசாரிக் கொள்கையாகவே இருக்கின்றது. அத்துடன் எமக்கும் அவர்களுக்கும் இடையே இருக்கின்ற அரசியல் ரீதியான கொள்கைகளும், பரஸ்பர புரிந்துணர்வும் சிறப்பானதாகவும் இருக்கின்றது.

தேர்தல் வந்தபின்னர் தந்திரோபாயங்களை வகுத்துச் செயற்படுவது எமது கட்சியின் செயற்பாடு அல்ல. அத்துடன் கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்து வாக்குகளை அபகரிப்பதற்காகத் திட்டங்களை வகுப்பது எமது கட்சியின் கொள்கையும் அல்ல.

எமது கட்சி கிடைக்கின்ற அதிகாரங்களை கொண்டு, கடந்த காலங்களில் எமது சிறந்த பொறிமுறைகளூடாக பல்வேறு முயற்சிகளை செய்து பல சாதகமான அடைவுகளை, வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கின்றது. அத்துடன் ஜதார்த்தமான ஒரு பாதையை நோக்கியே தமிழ் மக்களை வழிநடத்தியும் வருகின்றது.

இந்நிலையில் தற்போதும் ஒரு அரசியல் மாற்றத்துக்கான சூழ்நிலை வந்துள்ளது. அந்த மாற்றம் ஈ.பி.டி.பியின் பக்கமாகவே இருக்கும் என நம்புகின்றோம். என்று குறிப்பிட்டார். (இ-12)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ளோருக்கு யாழ். பல்கலையின் அறிவிப்பு

(கொழும்பு, அக். 24)

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 2024 ஆம் ஆண்டு தோற்றவுள்ள கணித மற்றும் உயிரியல் விஞ்ஞான மாணவர்களுக்கான உதவிக்கருத்தரங்குயாழ்ப்பாணப்பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும்ஒக்டோபர் 26, 27 ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இரு தினங்களும் காலை 8.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், தேர்ச்சி பெற்ற பிரபல பாடசாலைகளின் ஆசிரியர்கள்வளவாளர்களாக கலந்து கொள்ள உள்ளனர்.

மேலும்கருத்தரங்கின்போதுமாணவர்களுக்கு சிற்றுண்டிகள் மற்றும் மதிய உணவும் மாணவர் ஒன்றியத்தினரால் வழங்கப்படவுள்ளது.

இரண்டாம் மற்றும் மூன்றாம் தடவைகள் பரீட்சைகளிற்குத் தோற்றும் பரீட்சாத்திகளும் இக்குறித்த கருத்தமர்வில் பங்குபற்ற முடியும் என்பதோடு, வெளி மாவட்டங்களிலிருந்து பங்குபற்றும் முன்பதிவு செய்த மாணவர்களுக்கான போக்குவரத்துக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

குறித்த கருத்தமர்வில் பங்குகொள்ளும் மாணவர்கள் வழங்கப்பட்ட ஞசு ஊழனந இனை ளுஉயப செய்வதனூடாக அல்லது வழங்கப்பட்ட மின்னியல் இணைப்பினூடாக முன்பதிவு செய்துகொள்ளுமாறு விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தினர் கோரியுள்ளனர.

(ஐ)



# இலங்கையில் பயங்கரவாத தாக்குதல் முயற்சி கைதானவர்கள் தொடர்பில் வெளியான தகவல்

கொழும்பு, அக். 24)

இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளது.

பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 19 -23ஆம் திகதிகளுக்கு இடையில் அறுகம்பே பகுதியில் தங்கியிருக்கும் இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டம் உள்ளதாக, இந்திய உளவு அமைப்புகள், இலங்கைக்கு அறிவித்திருந்தன.

இலங்கையைச் சேர்ந்த இருவர் தாக்குதல் நடத்தத் தயாராக இருப்பதாகவும் அவர்களில் ஒருவர்





ஈராக்கை சேர்ந்தவர் என்றும் புலனாய்வுப் பிரிவினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

சர்வதேச போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் சில காலத்திற்கு முன்னர் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவரே இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருந்தவர் என விசாரணைக் குழுக்கள் கண்டறிந்துள்ளன.

தாக்குதல் நடத்துவதற்காக சுமார் 50 லட்சம் ரூபா பணம் அவர்களிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஈரான் மற்றும் பாகிஸ்தான் நாட்டுப் பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்பைப் பேணிய குற்றச்சாட்டில் யாழ். சுன்னாகத்தில் 42 வயதுடைய தமிழர் ஒருவர் கடந்த 20 ஆம் திகதி அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரின் கைதை அடுத்தே அறுகம்பே தாக்குதல் தாயாரிப்புப் பற்றிய விவகாரம் அம்பலத்துக்கு வந்திருக்கலாம் என்று சில பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். சுன்னாகத்தைச்சொந்த இடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஒருவர் 2016ஆம் ஆண்டு முதல் சில காலம் இலங்கைச் சிறையில் இருந்து பின்னர் விடுதலையாகியுள்ளார்.

சிறையில் இருந்த சமயம் பாகிஸ்தான் மற்றும் ஈரான் நாட்டுக் கைதிகளுடன் இவருக்கு நட்பு ரீதியான பழக்கம் ஏற்பட்டுள்ளது.

சிறையில் இருந்து விடுதலையானவர் பாகிஸ்தான் மற்றும் ஈரான் நாட்டவர்களுடன் கூட்டிணைந்து மீண்டும் ஒரு நாசகார செயலுக்குத் திட்டமிட்டார் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணிக்குச் சுன்னாகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து வந்த பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் வெளிநாட்டவர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த குற்றசாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கையிலுள்ள யூதர்களை இலக்கு வைத்து, தாக்குதல் நடத்த திட்டமிட்ட இருவரை பயங்கரவாத விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை அடுத்து, பழிவாங்கும் நோக்கில் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறலாம் என எச்சரிக்கப்பட்டிருந்தது.

இது குறித்து நேற்றையதினம் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், நாடு முழுவதும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது மேற்கொண்ட விசாரணைக்கு அமைய குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் விரிவான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)






# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை: சந்தேக நபராக பெயரிடப்பட்ட அநுரவின் சகா

*கொழும்பு, அக். 24*

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையில் சந்தேக நபராக பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன உள்வாங்கப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆணைக்குழுவின் மூன்று அறிக்கைகளை நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்து அது தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

மேலும், சம்பவம் தொடர்பில் வெளியிடப்பட்ட பி அறிக்கை தொடர்பான ஆவணங்களை ஊடகவியலாளர் ஒருவர் பெற்றுக்கொண்ட விதம் பிரச்சினைக்குரியது எனவும், தாக்குதல் தொடர்பான விசாரணையில் திருப்தி அடைய முடியாது எனவும் அவர் நீதிமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி இந்தக் கோரிக்கையை பரிசீலித்த நீதவான், எதிர்வரும் நவம்பர் மாதம் 13ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு





அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. ரவி செனவிரத்னவின் கீழ் உயிர்த்த ஞாயிறுகுண்டுத் தாக்குதல் தொடர்பிலான விசாரணை ஏற்றுக்கொள்ள முடியாதது என பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் செயலாளரினால் நியமிக்கப்பட்ட விசாரணை அறிக்கையில் சந்தேக நபராக அவர் பெயரிடப்பட்டுள்ளமையினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி சஜித கமகே இது தொடர்பில் கோட்டை நீதவான் தனுஜா லக்மாலிக்கு அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான மூன்று ஆணைக்குழு அறிக்கைகளையும் வரவழைத்து விசாரணையில் தலையிடுமாறு சட்டத்தரணி நீதிமன்றிடம் கோரியுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் வெளியிடப்பட்ட பி அறிக்கை தொடர்பான ஆவணத்தை ஊடகவியலாளர் ஒருவர் பெற்றுக்கொண்ட விதம் பிரச்சினைக்குரியது எனவும் விசாரணையில் திருப்தி அடைய முடியாது எனவும் சட்டத்தரணி நீதிமன்றில் தலையிடுமாறு விளக்கியுள்ளார்.

இந்தக் கோரிக்கையை பரிசீலித்த நீதவான், எதிர்வரும் நவம்பர் மாதம் 13ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

பிரேரணை ஒன்றை தாக்கல் செய்து இந்தக் கோரிக்கையை முன்வைத்த சட்டத்தரணி, தாக்குதல் தொடர்பான அறிக்கைகளை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் கோரியுள்ளார்.

இந்த சம்பவத்தில் சந்தேக நபர்களாக குறிப்பிடப்பட்டுள்ளவர் இதில் பொது பாதுகாப்பு செயலாளராக செயற்படுகின்றனர். இது தொடர்பாக உத்தரவு பிறப்பிக்க தமக்கு அதிகாரம் இல்லை எனவும் விசாரணையில் திருப்தி அடைய முடியாது எனவும் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

மேலும், "இது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் பொது ஊடகம் ஊடாக கருத்து வெளியிட்டுள்ளார். விசாரணை அதிகாரி இடமாற்றம் செய்யப்படுவார் என்றும் ஒரு நாளில் அந்த அதிகாரி பொலிஸ் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டதாகவும் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுக்களின் நீதிபதிகளுக்கு எதிராக சில அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

இதுபோன்ற அறிக்கைகளை வெளியிடுவது ஏற்புடையதல்ல. திறமையான நீதிபதிகள் இந்த அறிக்கைகளைத் தயாரித்தனர். இந்த அறிக்கை எப்படி சென்றது என்பதை ஆராயுங்கள்.

கைது செய்யும் அதிகாரம் நீதிமன்றத்திற்கே உள்ளது. உயிரிழந்தவர்கள் சார்பாக இந்த கோரிக்கையை விடுக்கின்றேன்" என சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உப சரத்து 52 (1) இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி, ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்கவினால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக டி.டபிள்யூ.ஆர்.பி. செனவிரத்ன(ரவி செனவிரத்ன) நியமிக்கப்பட்டுள்ளார். ரவி செனவிரத்ன, கொழும்பு பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் தொடர்பில் முதுமாணிப் பட்டம் பெற்றவராவார்.

ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரான அவர், விசேட அதிரடிப் படையின் ஆரம்பகால உறுப்பினராகவும், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பணிப்பாளராகவும், தாய்லாந்துக்கான இலங்கைத் தூதரகத்தின் முன்னாள் முதல் செயலாளராகவும், இன்டர்போல் இலங்கைக் கிளையின் முன்னாள் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். (ஐ)




# சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் முக்கிய அறிவிப்பு

*கொழும்பு, அக். 24*

எதிர்வரும் சுற்றுலாப்பருவத்தில் இலங்கைக்கு வருகை தருமாறு உலகம் முழுவதிலுமிருந்து சுற்றுலாப்பயணிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் அறிக்கையொன்றினை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ளது.

அனைத்து சுற்றுலாப் பயணிகளும் பாதுகாப்பாக தீவின் அழகை இரசிக்கலாம் என அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து சுற்றுலாப் பயணிகளும் நாட்டில் தங்கியிருக்கும் போது மிக உயர்ந்த பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சும் எடுத்துள்ளதாக சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை அடுத்து அறுகம்பை பிரதேசத்திற்கு தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதாக அமெரிக்க தூதரகம் தமது பிரஜைகளுக்கு எச்சரித்திருந்த நிலையில், அதனைத் தொடர்ந்து பல நாடுகள் தங்கள் நாட்டு பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தன.

இதனையடுத்து இலங்கையில் வெளிநாட்டவரகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த குற்றசாட்டில் இருவர் பயங்கரவாத விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதற்கமைய, நாட்டிலிலுள்ள அனைத்து வெளிநாட்டுப் பயணிகளது பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



'எமது மக்களுக்கான எனது பணி மேலும் உத்வேகமாக தொடர்ந்திட ஆதரவளிப்பீர்'
3
தமிழர் விடுதலை கூட்டணி
வன்னி தேர்தல் தொகுதி
செ.சந்திரகுமார்
(கண்ணன்)
சமூக தொண்டன், தமிழ் விருட்சத்தின் ஸ்தாபகர்
வீடுகள்
நிரந்தர கல் வீடுகள் - 28
வீடு திருத்த உதவிகள் - 15
தற்காலிக வீடுகள் - 10
தற்காலிக வீடுகளுக்கு தகரங்கள் வழங்கி புனரமைத்தமை - 45
கிணறுகள்
பொதுக் கிணறு - 02
குழாய்க் கிணறுகள் - 22
மருத்துவ உதவிகள்
மருத்துவ உதவிகள் இதுவரை - 54
கல்வி
கற்றல் உபகரணங்கள் வழங்கியமை இதுவரை - 18,220
பாடசாலைகளுக்கான கல்வி உதவிகள் இதுவரை- 42
பாடசாலைகளுக்கான பயிற்சி கருத்தரங்கு, வளவாளர் கொடுப்பனவு இதுவரை - 28
துவிச்சக்கர வண்டிகள் மாணவர்கள், பெண் - தலைமைத்துவ பெண்கள் இதுவரை -320
மாதாந்த கல்வி உதவிகள் இதுவரை - 380
அறநெறி பாடசாலை கட்டிடம் - 02
உலர் உணவுப் பொதிகள்
உலர் உணவுப் பொதிகள் இதுவரை - 19,800
கொரானா கால மக்கள் துயர்துடைப்பு உலர் உணவு பொதிகள் வழங்கியமை- 3800
பொங்கற் பானைகள் இதுவரை - 9100
விளையாட்டு
விளையாட்டு நிகழ்வுக்கான அனுசரணை இதுவரை- 60
விளையாட்டு நிகழ்வுக்கு வீரர்கள் வெளிநாடு செல்வதற்கான அனுசரணை இதுவரை- 10
வாழ்வாதார உதவிகள்
பெண் தலைமைத்துவ குடும்பங்கள், முன்னாள் போராளி இதுவரை - 310
பொது நிகழ்வுகள்
கலாசார நிகழ்வுகளுக்கான அனுசரணை இதுவரை- 78
கோவில் அன்னதானம், இல்லங்களுக்கான மதிய உணவு இதுவரை - 1250
இதை விட வவுனியாவிலுள்ள பெரியார் சிலை விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், சிரமதானம், இரத்ததான முகாம் மற்றும் சக மதத்தினரின் விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்து கொள்ளலும், அனுசரணை வழங்கலும்.
உங்கள் 'அன்பு' எனும் 3 எழுத்தை 'வாக்கு' எனும் 3 எழுத்தாக்கி என்னை 'வெற்றி' எனும் 3 எழுத்தை அடைய செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்
உங்களால் நான், உங்களுக்காக நான்
எங்கள் சின்னம்
X




நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
4
தமிழர் இருப்பு, பொருளாதார அபிவிருத்தி
உங்களில் ஒருத்தி பாராளுமன்றம் நோக்கி
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9




நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)
கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!
எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!
மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!
அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் இளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!
காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# இலங்கை முழுவதும் தீவிர பாதுகாப்பு

கொழும்பு, அக். 24

இலங்கை முழுவதும் பல பகுதிகளுக்கு தீவிர பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் நிலவும் இராணுவ நிலைமையை கருத்திற் கொண்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பிற்காக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்பின் பேரில், பொலிஸார் மற்றும் புலனாய்வு அமைப்புகளும் இணைந்து இந்த விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

சில நாட்களுக்கு முன்னரே கிடைத்த தகவல்! அறுகம்பைக்கு அனுப்பப்பட்டுள்ள 500 பொலிஸ் அதிகாரிகள்

சில நாட்களுக்கு முன்னரே கிடைத்த தகவல்! அறுகம்பைக்கு அனுப்பப்பட்டுள்ள 500 பொலிஸ் அதிகாரிகள் எந்தவொரு சுற்றுலாப்பயணியும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளை 1997 இலங்கை பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தெரிவிக்க முடியும் என இலங்கை பொலிஸ் பிரிவு அற 'வித்துள்ளது.

மேலும், மற்ற சுற்றுலா தலங்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு அடிக்கடி வரும் நகரங்களின் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வெளிநாடுகளில் ஏற்பட்ட போர் நெருக்கடி காரணமாக இலங்கையில் பழி தீர்க்கும் செயற்பாடுகள் இடம்பெறலாம் என இந்திய உளவு அமைப்புகள் எச்சரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்நிலையில் இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் முக்கிய சுற்றுலாத் தளங்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படலாம் என இன்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பி டத்தக்கது. (ஐ)











# அரச இல்லங்களை தொடர்ந்தும் ஆக்கிரமிக்கும் முன்னாள் அமைச்சர்கள்



கொழும்பு, அக். 24

முன்னாள் அமைச்சர்கள் 14 பேர் இன்னும் தமது உத்தியோகபூர்வ இல்லங்களை மீள ஒப்படைக்கவில்லை என இலங்கையின் பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து இந்த முன்னாள் அமைச்சர்களுக்கு நினைவூட்டல் ஒன்றை விடுத்துள்ள அமைச்சு, இந்த மாதம் 30ஆம் திகதிக்குள் இல்லங்களை மீள ஒப்படைக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், மீள ஒப்படைக்கும் முன்னர், தண்ணீர் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட அனைத்து பயன்பாட்டுக் கட்டணங்களையும் செலுத்துமாறும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ இல்லங்களின் கட்டணங்கள் அனைத்தும் முறையாக செலுத்தப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திய பின்னரே அவை திரும்ப ஏற்றுக்கொள்ளப்படும் என பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.10.2024இல் வெளியிடப்பெற்றது.